திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு மருத்துவமனை என்று சொன்னார்கள். ஆனால் சிறுசிறு கிராமங்களிலே எல்லாம் டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. அவை எந்த அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறைகளை கடைப்பிடிப்பதற்கு முன்னாலே டிஸ்பென்சரிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த முறை அதாவது 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலை வந்த பின்னாலே அந்த டிஸ்பென்சரிகள் எல்லாம் கன்வர்ட் செய்யப்பட்டு அவை எல்லாம் பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இப்போதிருக்கிற டிஸ்பென்சரிகள் பற்றி நமக்கு கவலை இல்லை. ஒவ்வொரு 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பதுதான் இப்போதிருக்கிற திட்டம். எனவே டிஸ்பென்சரிகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நகரம், மாநகரத்திற்குள்ளே டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. அது தொடர்ந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 424, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

424--

திருவாரூர் தொகுதி, நாகலூரிலிருந்து வலிவலம் வரை நகரப் பேருந்து இயக்குதல்

***20009–திரு வே. தம்புசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் தொகுதி, நாகலூரிலிருந்து வலிவலம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் தொகுதி நாகலூர்--வலிவலம் (வழி) கோயில் கண்ணாப்பூர், ஆதமங்கலம் தடத்தில் நாகலூரிலிருந்து

1994 ஏப்ரல் 28]

கோயில்கண்ணாப்பூர் வரையிலான 2 கி.மீ. சாலை மிக மோசமான நிலையில் உள்ளது. மேலும் அவ்வழித்தடத்தில் உள்ள பாட்டையாறு பாலத்தில் பேருந்து திரும்புவது கடினமான ஒன்று. கோயில் கண்ணாப்பூரில் இருந்து ½கி.மீ. தூரத்தில் உள்ள ஆதமங்கலம் வரை சாலை மிகவும் குறுகலாக மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே நாகலூர்-கோயில் கண்ணாப்பூர்-ஆதமங்கலம் சாலை சீர் செய்தால் இப்பகுதி வழியாக பேருந்து இயக்குவது பரிசீலிக்கப்படும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகலூர் வரையிலும் திருவாரூரிலேயிருந்து நகரப் பேருந்து வந்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்து சிங்களேரி, கோவில் கண்ணாப்பூர், ஆதமங்கலம், வலிவலம் வரையிலும் நெருக்கிய கிராமங்களைக் கொண்ட பகுதிகள் ஆகும். அந்தப் பகுதியிலே ஜனங்கள் நெரிசல் அதிகமாக இருக்கிற காரணத்தால் போக்குவரத்து பாதிக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளையெல்லாம் இணைத்து நாகலூர் வரையிலும் வரக்கூடிய பேருந்தை வலிவலம் வரையில் இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு வழிகளிலே நாங்கள் அந்தப் பகுதிக்காக பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஏறக்குறைய மொத்தம் 58 நடைகள் அந்தப் பகுதியிலே திருவாரூரிலேயிருந்து வலிவலம் வரையில் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபகுதி, பாலங்கள் குறுகிய பாலமாக இருப்பதாலும், சாலைகள் சீர் இல்லாத நிலையில் இருக்கிற காரணத்தாலும் அதை அங்கே இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டேன். சாலைகளை சீர் செய்த உடனேயே நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் .

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதமங்கலத்திலிருந்து வலிவலம் வரையில் சாலைகள் மோசமாக இருப்பது உண்மை. இப்போது நாகலூரிலிருந்து கோவில் கண்ணாப்பூர் வரையிலேயும் சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே தான் வலிவலம் வரையிலேயும் இயக்காவிட்டாலும் கோவில் கண்ணாப்பூர் வரையில் அந்த 2 கிலோ மீட்டர் வந்து-அதே சாலையில்தான் இருக்கிறது. அது வந்து திரும்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் A 425, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

425--

விளவங்கோடு தொகுதி, கருங்கலுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

*20440--**திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை பேரூராட்சியில் கறயான்குளம், ஐரேணிபுரம் வழியாக கருங்கலுக்குப் பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கறயான்குளம் அருகில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளதுன. சாலை அமைக்கப்பட்ட பின்பு பேருந்துகள் இயக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கு சாலைகள் நன்றாகத்தான் இருக்கின்றன. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலேயும் நேஷனலைஸ்டு ரோட்ஸ். எல்லாமே அரசாங்க வண்டியாகத்தான் ஓட்டியாக வேண்டும். 11 ரோடுகளில் சுதந்திரம் கிடைத்தபிறகு அந்தப் பகுதியிலே பஸ்கள் போகவில்லை. ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே பஞ்சாயத்து ரோடுகள் இருக்கின்றன. மெட்டல் ரோடு இருக்கிறது. அந்தப் பகுதியிலே போகக்கூடிய நிறைய பஸ்கள் 84ஏ, ஜெ. ஜெ. பஸ்கள், அதைப்போல 82-எச் போன்ற பஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. கேட்டால் அங்கே கலெக்ஷன் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு காரணம் அந்தப் பகுதியிலே ஆயிரத்திற்கும் மேலாக மினி பஸ்கள் ஓடுகின்றன. அது அரசுக்குத் தெரியும். அந்த மினி பஸ்களை நிறுத்தினால்தான், அரசாங்க பஸ்களை ஓட்டினால் லாபத்திற்கு ஓட்ட முடியும். ஆயிரம் மினி பஸ்கள் ஓடினால் எப்படி என்.டி.சி. லாபத்திலே ஓடும். இவையெல்லாம் ஆர்.டி.ஓ. ஆபிஸ் கையிலே இருக்கிறது.